Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.550/2023

**Depositions of PW-8**

| Name | திரு.சங்கர் கண்ணன் | Occupation | காவல் ஆய்வாளர் |
|---|---|---|---|
| Father's name | மகாலிங்கம் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th day of July 2025.

17.07.2025

எதிரி ஆஜர் .

**முதல் விசாரணை**

நான் தற்போது மதுரை மாநகர் விலக்குதூண் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். திருவில்லிபுத்தூர் காவல்நிலைய குற்ற எண் 214/2023 பிரிவு 392 இதச வழக்கை விசாரணைக்கு எடுததுக்கொண்டேன். இவ்வழக்கை சார்பு ஆய்வாளர் ராஜா என்பவர் 11.05.2023 அன்று நிலைய பொறுப்பிலிருந்தபோது கீதாலட்சுமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலைய குற்ற எண் 214/2023 பிரிவு 392 இதச ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். இவ்வழக்கு கோப்பை திருமதி செந்தமாமரை அனைத்து மகளிர் காவல்நிலைய ஆய்வாளர் அவர்கள் திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலைய பொறுப்பில் இருந்தார். அவர் வழக்கு கோப்பை பார்வையிட்டு 11.05.2023 அன்று 22.15 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முத்துகிருஷ்ணன், பூபேந்திரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தைபார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயாா செய்துள்ளார். பின்பு சாட்சிகள் கீதாலட்சுமி, செல்வி ஹறித்ரா, சங்கர ராமன், முத்துகிருஷனன், பூபேந்திரன்,

சார்பு ஆய்வாளர் ராஜா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 12.05.2023 ம் தேதி காலை 6.30 மணிக்கு காவல் ஆய்வாளர் செந்தாமரை குற்ற பிரிவு காவல் ஆளினத்துடன் இவ்வழக்கில் எதிரியை தேடி வந்த நிலையில் திருவில்லிபுத்தூர் நகராட்சி அலுவலகம் அருகே இவ்வழக்கின் வாத்திக்கு உரிய அடையாளமான BLUE COLOUR JEANS PANT, BLUE COLOUR FULL HAND SHIRT, கையில் HELMET உடன் நடந்து வந்தவரை, பிடித்து விசாரித்தபோது அவர் 11.05.2023 ம் தேதி இரவு மடவார்வளாகம் செல்லும் ரோட்டில் கல்மண்டபம் அருகில் வைத்து வாதியும் அவரது மகளும் நடந்து வந்து கொண்டிருக்கும்போது வாதியின் மகள் கழுத்தில் கிடந்த செயினை அறுத்ததாக ஒப்புக்கொண்டவரை கைது செய்து சாட்சிகள் சிவக்குமார், மணிகண்டபிரவு ஆகியோர் முன்னிலையில் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தையும் பதிவு செய்துள்ளார். பின்பு 8 மணிக்கு எதிரி இசக்கிமுத்து அவரது பேண்ட் பாக்கெட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்த சுமார் 3.040 கிராம் எடையுள்ள அறுந்த நிலையிலுள்ள தங்க செயினை 8.30 மணிக்கு அவர் இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தி, மற்றும் HELMET ஆகியவற்றை அத்தாட்சியில் கைப்பற்றி 9.10 மணிக்கு திருப்பார் கடல் அருகே TN 84 A 9309 HERO SPLENDOR அத்தாட்சியில் கைப்பற்றியும் 9.50 மணிக்கு எதிரி மற்றும் சொத்துக்களுடன் நிலையம் வந்து திரேக பரிசோதனை செய்து பாரா வசம் ஒப்படைத்து எதிரி அணிந்திருந்த BLUE COLOUR JEANS PANT, BLUE COLOUR FULL HAND SHIRT ஆகியவற்றை அதே சாட்சிகள் முன் அத்தாட்சியில் கைப்பற்றியுள்ளார். **எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆடைகளின் அத்தாட்சி அ.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சாட்சிகள் சிவக்குமார், மணிகண்டபிரபு, கீதாலட்சுமி ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின் எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். பின் 15.05.2023 அன்று நான் இவ்வழகதை பார்வையிட்டு விசாரணைக்கு எடுத்துகொண்டு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு இவ்வழக்கில் காவல் ஆய்வாளர் அவர்கள் விசாரித்த சாட்சிகளை விசாரித்தபோது அவர்களிடம் கூறியதைபோல என்னிடம் கூறியதால் நான் தனியாக வாக்குமூலம் எதுவும் எதிவு செய்யவில்லை. பின்பு 20.06.2023 அன்று வாதியின் மகளான ஹரித்ரா என்பவர் விருதுநகர் நடுவர் எண்.1, அவர்களின் முன்பு ஆஜர் படுத்தி குற்றம் சாட்டப்பட்ட நபரை அடையாளம் காட்ட அறிக்கை தாக்கல் செய்தேன். பின்பு 11.07.2023 அன்று இவ்வழக்கினை விசாரணை

முடித்து எதிரி இசக்கிமுத்து என்பவர் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன்.

**<u>எதிரித்தரப்பில் குறுக்கு விசாரணை-</u>**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.